

# படைப்பு குழுமம்

மின் இதழ் : பதிப்பு - 15

18-10-2017

ஆறு நாட்களுக்கொரு முறை
சிறகு முளைக்கும் அவனுக்கு
அந்நாளில் பறவையென்று பெயர்
முதுகுப்பை மூன்றாம் இறகாக
எண்பத்தியொரு ரூபாய்க்கு
பறத்தலுக்கான சிறகை இறகில் பொருத்த
அது அவனது
குஞ்சுப் பறவையின் இடத்தில் கொண்டு சேர்க்கிறது
அப்பாப் பறவையைப் பார்த்ததும்
இவளுக்கு ஒரு வானம் முளைக்கிறது
புன்னகைத்துப் பறக்கும் வானில்
ஒவ்வொரு புன்னகைக்கும் ஒரு விண்மீன் முளைக்கிறது
அப்பாப் பறவையின் நெற்றி முத்தத்திற்கு
குஞ்சுப்பறவை நிலாவை
ஒரு மொட்டெனப் பூக்கச் செய்ய
வானத்தின் வயிறு நிறைகிறது
பறந்த களைப்பில் பசியெடுக்கையில்
வானத்தைப் பறக்கச்செய்ய
தங்கள் சிறகுகளைத் தந்து விட்டு
இருவரும் வேடிக்கை பார்க்கிறார்கள்
பறக்கும் வானையும் பறக்கும் பறவைகளையும்



**கார்த்திகேயன் மாகா**




## வார்த்தைகள் ஜாக்கிரதை

எனக்கிருக்கும்
இன்னொரு முகத்தில்
பற்கள் அதிகமுண்டு.
நீலமேறிய அப் பற்களுக்கும்
செந் நாக்கிற்குமான இடைவெளியை
அவ்வப்போது கடுஞ்சொற்களால் நிரப்புவேன்
மற்றபடி உங்கள் காதுகளுக்கும்
எனக்குமான உறவு நீடித்திருக்கும்.

**மனோ ரெட்**

வீதிகளில் நடக்க அனுமதிக்காத
மேலத்தெரு சாதீப்பிணங்களை
பறையிசை எக்காளமிட்டு கூட்டிச்செல்கிறது
இடுகாட்டுக்கு

**போஸ் பிரபு**



எதில் அன்பு இருக்கிறது
இரவு பணியின்
நறுமணத்தோடு
மொழி தெரியா பாடலுடன்
சைக்கிள் மிதிக்கும் கூர்க்காவிற்கு
சிறு புன்னகை செய்வதில் இருகிறது
இந்த காலையின்
மொத்த அன்பும்

**கோபி சேகுவேரா**



குழந்தை உறங்கியபின்
இரவெல்லாம் விழித்திருக்கிறது
அப்பாவின் மீதிக் கதை!

**தக்ஷன்**

நடைதிறக்கும் தருவாயில்
இருள்கொண்ட கருவறையில்
ஆதிசிவனில் பாதியுடல்
பார்வதி கதைத்துக்கொண்டிருந்தாள்!

எல்லோரும் கூப்பிய கரங்களில்
அள்ளிக்கொடுத்த வரமாக
எல்லாமே கிடைத்துவிடப் போவதான
எதிர்பார்ப்பினூடே
வேண்டுதலின் முடிவற்ற மௌனத்தில்
அணையாத தீபத்தின் சுடரை
அனைவருக்கும் காட்டிய வண்ணம்
பூசாரி!

யாருமே கவனிக்காத பொழுதொன்றில்
சுண்டுவிரலில் சுண்டிவிட்ட பூசாரியின்
கண்ணீர்த்துளியொன்று அணைத்தப்போனது தீபத்தை!

கர்ப்பகிரகத்தில் காட்சியளித்து
அருள்பாலித்த கடவுள்கள்
கண்டுகொள்ளவே இல்லை
பூசாரியை கடைசிவரை!

**கோவை சசிக்குமார்**



# ஓர் கனவை

# சாதாரணமாக கடந்து விடமுடியாது

மார்கழி குளிர்போர்த்திய சாலையில்
வெறுமனே படுத்திருக்கும் யாரோ ஒருவரின் குளிருக்கு
தார்பாய் கிடைத்தது போல
அத்தனை கதகதப்பு அக்கனவுக்கு

கோடை வெயிலில்
மயங்கி கிடக்கும் யாரோ ஒருவரின்
தொண்டைக்கு பன்னீர் சோடா இறங்குவது போன்று
அத்தனை சுகம் அக் கனவுக்கு

நீண்ட நாள் ஆறா காயத்தில்
விரல் தொடமல் மயிற்பீலீயில்
மருந்திடும் சுகம் அக் கனவுக்கு

பள்ளி முடிந்ததும் ஒடி வந்து
தாயை தழுவும் குழந்தையின் சுகம் அக் கனவுக்கு

ஓர் மதியத்தின் நடுவெய்யிலில்
என் பின்னே நன்றியோடு ஓடிவரும்
குட்டி நாயின்
நுனி நாக்கு எச்சிலில்
நனைந்த சுகம் அக் கனவுக்கு

மிகக்கடுமையாக
பேசிக்கொணடிருக்கும் வேளையில்
முந்தானை இழுத்து சிரிக்கும்
குழந்தையின் முகசுகம் அக்கனவுக்கு

யாருமே இல்லாத பெருந்துயரில்
தோள்சாய்ந்து அழ கிடைத்த நட்பின் சுகம்
அக்கனவுக்கு

அம்மாவின் விரல்
கேசம் கோதும் சுகம்
அப்பாவின் ஆசை குட்டின் சுகம்....

அக் கனவு...
அக் கனவு...
அக் கனவு...

கடைசியாய்...,
வாழ்வை மிக நிம்மதியாய் வாழ்ந்து முடித்த
ஒற்றை நிமிடத்தின்
"ம்"சுகத்தின் பேரன்பு அக்கனவு.

அதனால்தான் சொல்கிறேன்
ஒரு கனவை கடப்பது அவ்வளவு எளிதல்ல.

**ஸ்டெல்லா தமிழரசி. ர**

## எச்சரிக்கை:

## உற்றுநோக்குகிறது உன்மேல் சமூகம்



அப்பனுக்கு கைகால் வெளங்காமல் போனதிலிருந்து
அம்மா வேலை தேடத்தொடங்கியிருக்கிறாள்.
தனது பத்து வயதில் துவங்கிய
பாத்திரம் துலக்கி வீடுவாசல் கூட்டிய அனுபவத்தை
மனதுக்குள் நினைத்துக்கொண்டாளாம்.
நேர்முகத்தேர்வின் முடிவில்
பெரிய வீடொன்றின் புறவாசலில்
அனுபவ வேலையே கிடைத்திருக்கிறது,
அதே வழியாகவே வந்துபோகவேண்டும்
என்ற நிபந்தனையோடு.
ஓராண்டின் நம்பிக்கையில்
சமையலுக்கு உதவிசெய்யும் நிலைக்கு
பதவிஉயர்வு பெற்றிருக்கிறாள் அம்மா.
சமையல்கூடமே நம்ம வீடளவு என்ற
பெருமையடங்கவே அவளுக்கு நெடுநாள் ஆனது.
பெரியவீட்டம்மாளுக்கு உடம்புக்கு முடியாம
போனதிலிருந்து
அம்மாவே அங்கு எல்லாம் என்றாகிவிட்டது.
புறவாசல் வழியாக மட்டுமே
வந்துபோகவேண்டுமென்ற நிபந்தனை மட்டும்
நாளதுதேதிவரை தளர்த்தப்படவேயில்லை.

**ஆண்டன் பெனி**

ஊர்ப்பக்கம் வந்து
ஒரு மாதங்களுக்கும்
மேலாகிவிட்டது
கூடவே என்னுடன்
எழுதும் புறாவையும்
அழைத்து வந்திருந்தேன்
கூப்பனரிசியை வடித்துக்
கொண்டிருந்த அம்மா
அதே அன்பு முகத்துடன்
வரவேற்றாள்
பூனைக்குட்டி மெல்ல மியாவென்று ஹாய்
சொன்னது
நாயின் வால் லாவகம்
எனக்குப் புரியாமல்
போகவில்லை
ஆட்டுக் குட்டிகள்
ஓடோடி வந்தன
துணிகளுக்குள்
இருந்த பொன்னாடையால்
அம்மாவின் முகத்தில்
பொங்கிய மகிழ்ச்சியில்
ரேசன் அரிசி
பாசுமதிச் சாதமானது

**சே தண்டபாணி தென்றல்**

தன் முதுகை
உணவுமேசையாகப் பாவிக்கும்
கரிச்சான் குருவிகளைவிட
கோடை நீர்ப்பந்தத்தில் குளம் பெயர்ந்து
முகத்தருகில் சமமாக நின்று
மேயும் வெள்ளைக்கொக்கை
அதிகம் நேசித்துவிடுகின்றன
மாடுகள்.

**அ. விஜயபாரதி**

ரோஜா இதழிலிருந்துகீழே விழுந்ததும்
நிறமிழக்கிறது பனித்துளி

**மகேஷ் சிபி**

ஓர் இரவின்
நடுநிசியில் அந்த
குடியிருப்பின்
வளாகத்தில் நானும்
அங்கோர்மரக்கிளையில் ஓர்
ஆந்தையும் விழித்திருந்தோம்

பாவம் இவனென்று
ஆந்தையெனைபார்க்க
பாவம் ஆந்தையென நான்
அதைபார்க்க எங்கள்
பரஸ்பரபுரிதலால்

நான் கண்ணயரும்போது
ஆந்தையும் ஆந்தை
கண்ணயரும்போது நானும்
விழித்திருப்பதென
ஒப்பந்தம் போட்டு
நான் கண்ணயர்ந்தபோது

ஏய்....செக்யூரிட்டியென்ற
குரலுக்கு என்னைவிட
ஆந்தையே முதலில் பதிலளித்து
எங்கள்
ஒப்பந்தத்தை
காப்பாற்றியது.

கொ.வடிவேல்



நினைவின் அடுக்குகளில்
அழுத்திக் கொண்டிருக்கும் ஞாபகப்படிமங்கள் நீர்த்துப்
போவதில்லை

ஒவ்வொன்றின் எரிதலில் இருந்தும் வெதும்பலின் நெடி

வழித்துணையற்றுப் பறக்கும்
வண்ணத்துப் பூச்சி பூக்களிடம் எதுவும் யாசிப்பதில்லை

சிறகுகள் மறக்கடிக்கப்பட்ட கூண்டுப் பறவைகளின்
குரல்களில் உயிர்ப்பில்லை

எல்லாவற்றிலும் எல்லாமும் இருப்பதில்லை

இருந்தபோதும் தனித்த இதயமொன்றின்
கண்ணீர்த்துளிகளை ஏந்திக்கொள்ளும் கைகளில்
ஒருவேளை இருக்கலாம்
ஏங்கித் தவித்த ஏதோ ஒன்று ...

**ஜானு இந்து**



கேள்விகளற்ற பொழுதொன்றில்
பதிலாய் வந்தாய்
தீரா தாகத்தை தீர்த்தத்தால்
நனைத்துவிட்டாய்

மருகிக் குறுகிக்கிடந்த
ஆசைகளை விரல் நுனியால் தீண்டி வீதிகளில்
இழுத்துவிட்டாய்

சிதைந்துகிடந்த சொற்களுக்குள்
வெட்கம் தடவிய வார்த்தைகளை
கோர்த்து கவிதை செய்தாய்

மனதின் அடர்த்திக்குள் ஊடுருவி
ஒவ்வொரு செல்லிலும் உன் பெயரை பச்சைகுத்தினாய்

காத்திருக்கும் பெருவாழ்வில்
விரல்பிடித்தபடி கூட வரும்
நிழல் நீதானென
நம்பிக்கொண்டிருந்த வேளையில்

மறந்துபோன கடவுச்சொல்லாய்
தொலைந்து போனாய்...!

**தனபால் பவானி**

சுவை தேடி இடுகாட்டின் பின் வழியில் நுழைந்து
கல்லறைகள் சுமக்கும் காலத்தை
கணக்கெடுத்தவாரே சுற்றி வருகிறோம்

சற்றுமுன் மாறிய திரு. சிற்றம்பால அடியார்களின்
குழுவில் கூடி சிவபானம்
உறிஞ்சிய நாங்கள்.

குட்டி ஆடுகளின் தூக்கம் கலைத்து புது பிணத்தின்
இசையில் மயானம் எங்கள் வசமாகியது.

உறவுகள் தொலைத்த வெறுமையில் ஆசா பாசம்
எதுவுமில்லா ஈசனின் ஆட்டம்...

முகமற்ற மனிதனாக-மிருகமாக
பித்ருகளுக்குப் படைத்த
படையலைத் தின்று தீர்த்து
அகோரத்தைப் பாதி இழந்தவர்களாக
வெளியேறினோம்
ஞாயிற்றுக் கிழமை ஒன்றில்

**விஜேந்திரா**

## ஒரு கடவுளும் சில மீன்களும்



கொஞ்சம் நீர்
ஒரு தொட்டி
சில மீன்கள்
ஒரு மீன்கடவுள்
மீனுலகை படைத்தார்

உணவிடுதலும்
நீர் மாற்றுவதுமாய்
காத்துவந்தார்

மீன் கடவுளுக்கு மீன்களைத் தெரிந்திருந்தது
மீன்களுக்கு மீன்கடவுள் பற்றி
தெரியாதிருக்கலாம்
தெரியாதிருப்பதுதானே கடவுள்
என்று கர்வம் கொண்டார்

ஒரு முறை மீன்கடவுள்
தொட்டியை அதிரவைக்க
கலங்கிய மீன்கள்
அவரை மீன் சாத்தானாக கருதியிருக்கலாம்

ஒரு விடுமுறை தினத்தின்
காலையில் மீனொன்று
அவரின் அனுமதியின்றி
செத்து மிதக்க
அது ஒரு தற்கொலையென்று அறிவித்தார்

எதற்காகவோ மீனிரண்டு
சன்டையிட மீன்கடவுளின்
நடுவுநிலை
தடுமாறியது

மீன் மொழி மீன் வலி மீன் காமம்
எதுவும் புரியாமல் போக
பராமரித்துச் சலித்துப்போனார்
மீன்கடவுள்
விரக்தியில்
மீனுலகை கைவிடுவதாக
அறிவித்தார்
மீனுலகின் இறுதிநாளையும் உறுதிசெய்தார்

விபத்தொன்றில் மீன் கடவுள்
மரித்துப்போக
இது குறித்த எந்தச் சலனமுமில்லாமல்
நீந்திக் கொண்டிருந்தன மீன்கள்

நிலாரவி


வல்லினத்திற்கும்
மெல்லினத்திற்கும்
இடையிலான இனத்தில்
அவளான அவன்...

புடவை கட்டியிருந்ததால்
அவளாகவே தெரிந்திருந்தாள்...

ஒரு இயற்கை உபாதையின்
உச்சநிலை நெருக்கடியில்
பொது கழிப்பறை ஒன்று
சொர்க்கமாக தெரிந்தது..

மேசைக்காரனிடம் சில்லரையை
வந்து தருவதாக சொல்லி
உள்ளே ஓடிய அவளை
வரவேற்பதாயில்லை
அங்கிரு கழிவறைகள்..

இரண்டும் உபயோகத்தி
லிருந்ததாலான தாமதங்களால்
முன்பைவிட அதிகமாகவே
கனத்தது அவளின்
சிறுநீர்ப்பை..




கதவுகளுக்கு வெளியே
மேலும் நான்கு கால்கள்
உபாதையின் நெளிவு
சுழிவுகளுடன்...

கால்களை பிண்ணிப்
பினைந்து சிறுநீர்
சங்கடத்தில் அவள் நெளிந்த
அக்கணத்தில்தான் வேட்டியின்
அருமை அவளான அவனுக்கு
புரியவந்தது..

ஒரு வேட்டியோ அல்லது கால்சட்டையென்றால்
ஏதாவதொரு மதில்
சுவர்தானே.. !!!

**ஆனந்த்**



# நீலச்சங்குப் பூ

நிறைவேற்றுமையோடே துயில்கொள்கிறீர்கள்
நடுத்தரமான கன்னியுடன் கடற்கரை சென்று காதல்
தணியாத பசியில் இருப்பதாகப் பேசி
உங்களது உலகத்தின் சட்டையை அவிழ்த்து
அலைக்கு அணிகிறீர்கள்
மணல்நெய் அள்ளி காதலியை மூடுகிறீர்கள்
சில குரல்துண்டுகளை அவளது குரல்வளையில்
முத்தமிட்டு பதியமிடுகிறீர்கள்
அவளோ ஊறும் பெருங்காலத்தை ஒற்றை விதையாய்
திரட்டி ஊன்றுகிறாள்
நிராசையன் இவ்வுலகில் இல்லை என
பெண்ணின் கண்களிலிருந்து
திரியின் சாயை கொண்ட பூ மலர்கிறது
இருளின் மௌனத்தை பெண்ணுடல் பிளக்கையில்
"இருளே கருணை பிறக்கும் இடம்" எனும் ஒலி
கருஞ்சொட்டாய் உலகின் மேல் விழுகிறது
நாகமல்லிப்பூ அவள் நாசி
அவளது உக்கிர மது குடித்தபின்னே
அநுமை பெருகும் வாக்கியங்கள் அவள்மேல்
அலையேறுகின்றன

"உனது சுவாசத்தின் சௌந்தர்யம் எனை
மேகமாக்குகிறது
நான் புகையினூடே நடக்கிறேன் தேவி புரிகிறதா"
என்று புலம்பும் ஒலியை அவள் கேட்கிறாள்
நிதம்பம் நிறைய முத்தமிடுகிறீர்கள்
ஊதா நிறங்களை உட்செலுத்தி மாய்கிறீர்கள்
பாசக்கட்டின் பதினெட்டாவது அடுக்கில்
நீரதி அன்னமாகிறாள் பின்னர்
அனந்தஞானியாகிறாள்
உயர்நிலை உப்புச்சொல்லோடு முடிவதில்லை
முத்தங்கள் என அலையள்ளி மார்பிலடிக்கிறீர்கள்
மூலசூத்திரம் ஒன்றை கண்ணுக்கடியில் தேவி
புதைக்கிறாள்
சங்குப் பூக்களால் இளைப்பாற அவனுக்கு
இடமமைக்கிறாள்
ஆணின் நிர்வாணமனம் காண்பதரிது
என்று புரண்டு படுக்கிறது எனது கனவு
ஒரு நீலச்சங்குப்பூ எனது நெற்றியில் மலர்கிறது

**தேன்மொழி தாஸ்**

நீ பேசி நகர்ந்த
பொழுதொன்றில்
இடைநின்ற மெல்லிசைக்கு
பின்னான காலம் என்றும்
நிசப்தமாய்

நீ சென்று திரும்பும்
பேருந்து இப்பொழுதும்
ஊர் வருகிறது

நீ நடந்து சென்ற
சிறுவழி பாதைகள்
மணமிழந்து விட்டன

கருவிழி சிவக்க
வீசியெறிந்த
உன் ஒற்றை கடவுப்படம்
மென்புயலொன்றில்
சிக்குண்டு பிறழ்ந்த
மனக்காரனிவன்
கை மீள்கிறது


உன் நினைவுகள் மட்டும்
விழி நீரில் தினம் நீந்தி
நெற்றி வருடி
இதழ் முத்தமிட்டு
மெல்ல கடக்கிறது

செவ்வானம்
சிவந்த உன்முகம் தீட்டி
மூட்டுகிறது மனத்தீயை

இரசணையுறச் செய்த
மலர்கள் மெலிந்து
கிளை பிரிந்து
அகால மரணமுற போகிறது


எனை மட்டுமல்ல
மணத்தால்
பலர் மனம் பறித்த
மலர்களையும் சுட்டெரித்து
இரவை போர்த்தி சிரிக்கிறது பொன்மாலை.

**கிருபானந்த் நாமக்கல்**



இருட்டை இழுத்துப் போர்த்தி உட்கார்ந்திருந்தேன்,
வெளிச்சமொன்று
என் தோளில் கையைப் போட்டது.
ஆம் அதே சூஃபிக் கிழவன் உட்கார்ந்திருந்தான்,
கவலை சூழ்ந்ததற்குக் காரணம் கேட்டான்
வாழ்க்கை இருட்டாய் இருக்கிறதென்றேன்,
தொலைக்காத சிரிப்பை மீளுரு செய்தான்,
இருட்டு எப்படியிருக்கும்? என்றான்
வெளிச்சத்தைத் தின்றிருக்கும் என்றேன்,
மீண்டும் அதே சிரிப்பு...
இரவின் வானத்தில் என்ன தெரிகிறதென்றான்,
நிலவையும் நட்சத்திரங்களையும் பட்டியலிட்டேன்,
பகலின் வானத்திலெனக் கேட்டான்
சூரியன் மட்டும் என்றேன்...
இப்போது தெரிகிறதா எது வெளிச்சமென்று
திருப்பிக் கேட்டவன்
எழுந்து போ இருட்டுதான் வெளிச்சம் என்றான்.
எனக்குள்ளொரு வெளிச்சம்
மெல்ல எட்டிப் பார்த்தது
அவன் தூரத்தில் சென்று கொண்டிருந்தான்.

**முகமதுபாட்சா**



# பகல் கனவு

அன்றொருநாள்
தாத்தா கைப்பிடித்து
சாலையோர
பொம்மைக்கடையில்
மறுக்கப்பட்டது
ஒரு கனவு

வேறொருநாள்
வகுப்பறைக் கேள்விகளில்
ஆசிரியரின் ஏளனத்தில்
சிக்கிச்சிதைபட்டது
ஒரு கனவு

முழு இரவு
நாளொன்றில்
தந்தையின்
மதுப்புட்டிகளின்
சலசலப்பில்
உடைந்துநொறுங்கியது
ஒரு கனவு

நேற்றும்கூட
பத்துப்பாத்திரங்களில்
படிந்த அம்மாவின்
கைரேகைகளை
மீட்டிட அடகுபோனது
ஒரு கனவு

இன்றும் அப்படியே
படித்துச்சேர்த்த
மதிப்பெண் தாள்களைச்
செல்லாதென்ற
சட்டத்தின் நுனியில்
தூக்கில் தொங்கியது
ஒரு கனவு

நாளை மட்டும்
மரணித்து நிற்கும்
இளமைக் கனவுகள்
டிஜிட்டல் தேசத்தில்
சிறகடிக்குமென்பது
அப்பட்டமான
பகல் கனவு!!!!!!!

**அம்பிகா குமரன்**

"கவிதா" என்ற பெயரை
தம் பத்தாம் வகுப்பு
கணக்கு நோட்டின் பின்புறம்
எழுதி வைத்திருந்ததால் தான்
கணக்கு வாத்தியாரிடம் பிடிபட்டு
அடிவாங்கினான், கதிரவன்.
அன்று முதல்
கவிதா என்ற பெண்ணை
கதிரவன் காதலிப்பதாகவே
எங்கள்
அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
முழுவதிலும் பேசிக்கொண்டனர்.
பிறகு, வீட்டுச் சுவரில் எழுதி வைத்து
வீட்டிலும் மாட்டிக்கொண்டவன்
மரம், செடியென பார்க்கும் யாதிலும்
கவிதாவின் பெயரையே
கிறுக்கிக் கொண்டிருந்தான்.
கதிரவனை அழைத்து
கவிதா பற்றி விசாரித்தால்,
அச்சம் மிகுந்த
தம் கண்களை மருண்டவாறு உருட்டி
எதுவும் கூறாமலேயே
அமைதியாய் ஓடிவிடுவான்.
நாங்களும் கவிதா பற்றி
தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில்
அவனிடம் தொடர்ந்து விசாரிக்க,
அவனும் தொடர்ந்து ஓடியவாறிருந்தான்.
இப்படியாக அவன்
ஊரை விட்டே ஓடிய ஒருநாளில்
யாரென்றே தெரியாத கவிதாவோடு தான்
கதிரவன் ஓடியிருக்கக்கூடுமென
ஊரே நம்பியது.
பல இடங்களில் தேடியும்
கிடைக்காத கதிரவன்
பல வருடங்களுக்குப் பின்
ஊருக்குத் திரும்பியிருந்தான், கவிதாவாக.
இப்பொழுது அந்த கண்கள்
சிறு மிரட்சியும், பயமுமன்றி
சிரித்துக் கொண்டிருந்தது
பேருண்மையின் ஒளி வீசிட..

**ஷைள**



கதவிடுக்கில் "லிசி" மாட்டிவிடக்கூடாதென
பத்திரமாக சாத்தி கடுகைக்கூட கருகவிட்டிருக்கிறேன்

தொலைகாட்சிப்பெட்டியின் மேல்
கலவி செய்துகொண்டிருக்கும் "சிகப்பி" கரப்பான்களை
என்றுமே தொந்தரவு செய்ததில்லை

நிறைமாத கர்ப்பதோடு வீட்டிற்கு வந்த "வொய்ட்டிக்கு "
பாட்டி ஆகும்வரை பால் ஊத்த மறந்ததில்லை

இரண்டுகால் தூக்கி என்னை வணக்கமிட்டு வரவேற்கும்
"ஜிம்மி"யை நெற்றியில் முத்தமிடாமல் வீடு
நுழைந்ததில்லை

சுதந்திரமாக என் மீது அமர்ந்துகொண்டு
சொன்னதையே சொல்லும் "அப்பு"விற்குப் பிடித்த
சிவப்பு மிளகாய் பழங்கள் எனக்கும் பிடிக்கும்

கூண்டில் இருக்கும் "கிரீச்சி"களை எனது பிறந்தநாளில்
திறந்தே விட்டுவிட்டேன்

ஞாயிறு சமையல்களில் மட்டும் என் "ஜீவகாருண்ய
ஒழுக்கம்"
செத்துக் கொதிக்கிறது

**அகதா**

என்ன இருந்தாலும்
அந்த வண்ணத்துப்பூச்சி
அந்த நெடுஞ்சாலையில்
அந்த வேகத்தில்
என்னை அவ்வளவு
நம்பி இருக்க கூடாது
வீடு வரை
சுமந்து வந்திருக்கிறேன்
ஒரு கொலை உணர்ச்சியை

**கி.கவியரசன்**





தினம் மாலை ஆறு மணிக்கு
நாக்கு வறண்டு
நடுநடுங்க
வியர்வை சிந்தி நொந்து..,

கூலி வேலை செய்து
துருப்பிடித்த சைக்கிள் ஓட்டி வரும்
ஆறுமுகம் தாத்தாவிற்கு..,

இரத்த அழுத்தம்
பார்வை கோளாறு
மாரடைப்பு
மலச்சிக்கல்
இருமல்
இடுப்பு வலி
மூட்டுவலி
பக்கவாதம் மற்றும் சிறுநீர் எரிச்சல்..!

அதோடு...

ஆறுமுகம் தாத்தா
படிக்க வைத்து ஆளாக்கிய
இரண்டு மகன்களும்
இரண்டு மகள்களும் இருக்கு..!

**செல் வா கவி, மத்துகமை**

# ஏக்கம்

புகைப்படம் பழையதாகிவிட்டது...
மூன்று வருட புழக்கத்தில்
எப்போது வேண்டுமானாலும் கிழியலாம்

குழந்தை குப்புற விழுந்தது முதல் நடை
பழகியது வரை செவி வழி செய்திகள்...

தொலைபேசிகளால் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறோம்!

பெரும்பாலும் குரலுறவினாலேயே
கணவனென அடையாளப்படுத்திருக்கிருக்கிறேன்...

பாலைவன வேலை...


முன்பெல்லாம் வெடிக்கிற அழுகையை
புறந்தள்ள முயற்ச்சிப்பாய்
நான்கு சுவர்களுக்குள் நீயும்...
அறை நண்பர்களுடன் நானும்....

இப்பவும் உன் அம்மா
'மாப்பிள்ளைக்கென்ன ராசா வெளிநாட்ல
வேலை' என்கிறாளா

கடைக்குட்டி கல்யாணியின் கல்யாணம்
அடுத்த வருடம் முடிந்து விடும்....

புகைப்படம் பழையதாகி விட்டது
காகித முத்தங்களில் ஸ்பரிசம்
பிடிபடுவதில்லை!

**S.ஆனந்த குமார்**



குழந்தை விளையாடி பின்
மோகம் தீர்ந்து போனதொரு
பொம்மையைப் போன்று
தனித்தெறியப்பட்டுக் கிடக்கிறது
உன் மீதான என் ப்ரியம்.

எப்போதேனும் நீ வந்து
தூக்கி விளையாடக் கூடுமெனும்
எதிர்பார்ப்பை உள்ளடக்கி
விழுந்து கிடக்கும் அது
நீ வந்து போகும்
ஒவ்வொரு முறையும்
கண்களை மட்டும் உயர்த்தி
உனைப் பார்த்தபடி இருக்கிறது.

நீ உன் மடியமர்த்தி தலைவாரி
பூச்சூட்டி அழகு பார்த்த நாட்களில்
கொஞ்சம் கர்வித்திருந்தது
அத்தனைத் தவறா சொல்.

உனக்கென்ன
விளையாட உண்டு ஓராயிரம் பொம்மைகள்.
உனக்கெப்படி உரைப்பது
என் ப்ரியத்திற்கென உள்ள
ஒரே குழந்தை நீதானென்பதை.

**சுரேஷ் பரதன்**

என் மரணத்திற்குப் பிறகு என் ஆன்மா
கோவில் வாசலில் யாசிக்கும் ஒருவரின் தட்டில் விழும்
சில்லறை எழுப்பும் ஒலியாக இருக்கலாம்
பெரு மழையைப் பின்னிழுத்து முன்வந்து
தரையில் விழாமல் உங்கள் தேகம் தொடும்
முதல் துளியாக இருக்கலாம்
பச்சையம் மறைந்த காய்ந்த சருகின் இலகுவாக இருக்கலாம்
கண்ணுற மட்டுமே முடிந்த கானல் நீரலையாக இருக்கலாம்
ஒருபோதும் கொடியவனொருவன் கையிலிருக்கும் கத்தியில்
மின்னும் ஒளியாக இருக்காது
வஞ்சகன் ஒருவனின் நெஞ்சுபுகும்
மூச்சுக்காற்றாய் இருக்காது
ஒரு கூரை எரிய காரணமான முதல் பொறியாக இருக்காது
எத்தருணத்திலும் நஞ்சின் சுவையாக இருக்கவே இருக்காது
ஆனால்
பிஞ்சைக் கசக்கும் காமுகன்களைக் கொல்லும் எந்த ஒரு
ஆயுதத்திலும்
என் ஆன்மா நிறைந்திருக்கும்

**மு. சுகுமாறன்**

# ஒரு தேசபக்தனின் கதை!

இந்தப் பதின்மூன்றாவது போரில்...
மொத்தமாகச் சூறையாடியபின் அந்த
நகரம் இருந்த இடம்
எங்களால் புறக்கணிக்கப் பட்டது.

பெண்களையும்
குழந்தைகளையும்
போர் விதிகளின்படி விடுதலை
செய்து
அநாதைகளாக்கி விட்டு....

புகைக் கரி மண்டிய குளத்தில்
அடிமைகள் குளித்துக்கொள்ள
அனுமதித்தோம்.
அனைவரும் விரைத்தபடி
மறுத்தனர்!

அவர்களின் நெஞ்சில்
தீட்டப்பட்டிருந்த அடையாள
இலச்சினைகளை
கூரிய ஈட்டி முனைகளால்
கீறி அழித்தோம்!

அனேக முட்டைகளில்
துண்டு துண்டாய் அவர்களின் நகரம்
கட்டப்பட்டிருந்தது.
முதுகிலேற்றி கசையடி கொடுத்தோம்!

கண்களில் கனல் காட்டிய சில
அடிமைகளின் உலகை
இருட்டாக்கிய பின்
எஞ்சியவர்கள் ஊமைகளாயினர்!

எங்கள் காயங்களிலிருந்தும்
இரத்தம்தான் வடிந்தது.
ஆனால்
நாங்கள்தான்
வெற்றிபெற்று விட்டோமே!

ஆர்ப்பரித்து நெருங்கினால்.
இந்த அடிமைகளில்
மாண்டவர்கள் மூட்டிய தீ
இன்னும் எங்கள் நகரத்தை
எரித்துக் கொண்டிருந்தது!

செப்பனிட்டு
கொண்டுவந்த முட்டைகளை
அவிழ்த்துப் பரப்பினோம்.
இரத்த நெடிசூழ
எங்கள் நகரம் எழுந்தது!

அந்தப்புரத்திலிருந்து
வெளியே வந்த அரசன்
வெற்றி வெற்றியென்று
கொக்கரித்தான்!

அவசரமாய் ஓடிவந்த ஒற்றன்
பகைதேச நகரமொன்றில்
அமைதி நிலவுவதாக
ஓலை வாசித்தான்.

அரசனுக்கு படுக்கையறையிலிருந்து
அடுத்தப் போருக்கு அழைப்பு வந்ததும்,
அண்டைநகரத்து அமைதியை
அள்ளிவந்து கருவூலத்தில்
சேர்க்க கட்டளையிட்டுவிட்டு
மின்னலென கதவடைத்தான்!

நாங்கள்
விழுப்புண் தொட்டு
திலகமிட்டுக்கொண்டு
புறப்பட்டபோது
இருட்டத் தொடங்கி விட்டிருந்தது!?


**குறிஞ்சி நாடன்.**

அசந்தர்ப்பமாய்
சமையலறையின் பக்கச் சுவர்களில் கையூன்றினால்
ஒட்டும் அவ்வடர்ப் பிசுக்கு..,
காலணி அணியாமல்
உலாவுகையில்
மிதிபடும் சளிக்கூழ்மத்தின்
பெரும் நசநசப்பு..,
மின்சாரம் நின்ற நிசி வேளையில்
வந்தேறிய வண்டை
நசுங்கச் செய்த விரல் முனை
துர்மண முகர்வு..,
முகச்சவரத்தின்போது
வாகாய் வெட்டுப் பட்டவிடத்தில்
கசியும் ரத்தத்தின் பிசுபிசுப்பு.,
மேன்ஷன் அறைகளுக்குச்செல்கையில்
படிக்கட்டின் மூலைகளில் அப்பிய
பான் கறையின் செறிவு..,
உதிர் இலைகளை மிதிக்குந்தோறும்
மர எலும்புகளையே உடைப்பதாய்
ஒக்கும் ஒலிச்சிதறல்கள்..,
பாதிமரம் ஏறுகையில்
போதுமென மெய் வருந்தி
பின்னங்கால்களில்
நரம்புகள் இழுத்துக் கொள்ளும்
அதிர்வுகள்..,
எனத் தனிமையின் அழுத்தத்தை
எப்படிச் சுட்டினாலும்
தனிமை தனியனாகவே
நிற்கிறது எப்போதும்.

**வேதநாயக்**

முதல் முதலாய்..
காட்டைப் பிரிந்த ஏக்கம்..
ஒரு கண்ணிலும்..
முதல் முதலாய்..
ரயிலைப் பார்த்த பிரமிப்பு..
மறு கண்ணிலுமாய்..
சரிந்து விழுந்த சிறு குன்றென..
தண்டவாளங்களுக்கிடையில்...
இறந்து கிடந்ததொரு...
யானை!!.

**ரூபன்**



செல்லம்மா பாட்டிக்கு ஒத்த பல்லு கூட
கெடயாது குசுக்கானி ஒரல்ல சுண்ணாம்பு தடவுன
வெத்தலயோட சுருள் பாக்கும் வச்சு
மாவு போல இடிச்சு தருவதுல அம்புட்டு
ஆனந்தமெனக்கு

ஒடம்பு சரியில்லாத கொழந்தைக்கு
ஈசானத்து மூல பக்கம் வேண்டிக்கிட்டு
முந்தனையால முனுமுனுன்னு மந்திரிச்சு விடும் செல்லம்மா
பாட்டியின்
கை ராசி சுத்து பட்டு பூராவும் தெரியும்

ஆடு மாடுக்கு வெசகடிக்கு பச்சலை
தர்றதுல ஆரம்பிச்சு பச்சப் புள்ளைக்கு
பால் பத்தலங்கிறது வரைக்கும்
எங்கூரு எல்லா பிரச்சனையும் சரி செய்ய செல்லம்மா
பாட்டியே போதுமென
எல்லாருமே நம்பினோம்

இடுப்புல இருக்குற சுருக்கு பையில இருக்குற
திருமண்ணெடுத்து செல்லம்மா பாட்டி பூசிவிடுவதில்
இருக்கும் வாஞ்சை
பாட்டிய போலவே அம்புட்டு அழகு

இப்படி வாழ்ந்த வாழ்வெல்லாம் வச்சுக்கிட்டு
வாழும் ஆவணமா இருக்குற செல்லம்மா
பாட்டியோட நேரஞ் செலவழிக்கும் எனை
கேட்காத ஆளு இல்ல

அந்தக் கெழவி கூட என்ன பேச்சு ஒனக்கு
வேற பொழப்பே கெடயாதான்னு

அவர்களுக்கென்ன தெரியும்
எல்லாருமே பாட்டியாகலாம்
ஆனால் ஒருத்தாரலாயும்
செல்லம்மா பாட்டியாக முடியாதுங்குற
உண்மை..!

**நிவிகா மித்ரை**



ஓங்கி
மிதித்து..
நிற்கும்..
இந்த
வாழ்க்கை
யானையின்,,
பெருத்த பாதத்தில்
சிக்கியிருக்கும்
இந்த
குட்டி மனதை
மீட்பது..
அத்தனை எளிதல்ல..

அதற்காக,
நீங்கள்
நெடுஞ்சாலையில்,
ஒரு
மிதிவண்டியோடு
போட்டிக்கு
வரும்,,
சீறுடை சிறுவனுக்காக
உங்கள்
காரின் வேகத்தை
குறைக்க வேண்டியிருக்கும்..

குழந்தையின்
பிஞ்சு
விரல்கள்..
ஊட்டிவிடும்
ஒற்றை
பருக்கையை,,
நிதானித்து
உண்ண
வேண்டியிருக்கும்..

வீடு
திரும்பும்
மாலையில்..
நேற்றிரவு
குட்டி
போட்டிருந்த
தெருநாய்க்காக..
கொஞ்சம்
ரொட்டித்துண்டுகளை
வாங்க
வேண்டியிருக்கும்..

பேருந்து
நெரிசலில்..
ஒற்றை
ஐந்து ரூபாய்
காசை
தவறவிட்டு..
பதட்டமாக
தேடிக்கொண்டு
இருக்கும்..
முதியவருக்கும்
சேர்த்து,,
பயணச்சீட்டு
எடுக்க
வேண்டியிருக்கும்..

எதுவும் முடியாத
பட்சத்தில்,
என்னென்ன
பக்கவிளைவுகள்
வருமோ,,
என்கிற
குழப்பத்தோடு,,,
மருந்துக்கடை
வாசலில்,,
மன அழுத்த
மாத்திரைக்காக...
நிற்கவேண்டியிருக்கும்...!

**கவிதை மொழியன்**

திருமணக் கூட்டத்தினுள்ளின்று
நமக்கே நமக்கானதாக
ஒரு குழந்தை
ஏலக்காய் தேநீர்க் கோப்பையேந்திச் சமீபிக்கிறாள்


ஊர்க்கோடி அரசமரத்தடியில்
பச்சை இலைக்கு மேலாக
சிறுகல் ஒன்றை அமர்த்தியிருந்தார்கள்

தெருவைக் கடக்கும் போதெல்லாம்
காலத்திற்குப் பொருந்தாத
'இதயம் ஒருகோவில்' பாடல் ஒலிக்கிறது

வெறுமையாகிவிட்டிருந்த திண்ணைப்புறத்தில்
அறுந்துபோனதாகச் சொல்லி
ஒரு செருப்பு வைக்கப்பட்டிருக்கிறது

ஊரைச் சுற்றி வருகையில்
யாரோ எங்கிருந்தோ
பின்கழுத்தில் தண்ணீர் தெளிக்கிறார்கள்

ஒன்றுமில்லை.....
பழைய காதலிகள்
தாங்கள் ஊருக்கு வந்திருப்பதாகக்
குறிப்புணர்த்திக் கொண்டிருக்கிறார்கள்..!!



கட்டாரி

என் வீட்டினுள் நுழைந்த
இந்த இரவு தான்,
நாளைய விடியலில்
நான் மரணித்திருப்பேனென
மெதுவாகக் கூறியது..
மிக மெதுவாய் நகரும் நொடிமுள்ளை
அதி வேகமாய் நிறுத்தினேன்.
நாட்காட்டித் தாள்கள்
கறையானுக்கு இரையாகதிருக்குமாறு
நாட்காட்டி புகைப்படத்தில்
நகைக்கும் இறையிடம்
கண்ணீர் மல்க மன்றாடினேன்.
வீட்டின் சன்னல், வாயிற்கதவுகள்
அனைத்தையும் மூடி,
கூவாதிருக்க சேவலின் குரல்வளையில்
மடிந்த என் நகத்தால்
செங்கோடு வரைய..
மேற்கூரை சிறுதுளை வழி
உள் நுழைந்த வெள்ளியொளி பற்றி
அரற்றிக் கொண்டிருந்தான்
என்னுள் இருந்த ஒருவன்.
அவனை அச்சிறுதுளை வழியே
வெளியேற்றி
அத்துளையையும் இறுக மூடிவிட்டேன்.
இனி இன்னும் இன்னுமாய்
வீட்டினுள் வாழும் இரவோடு
என் உயிரையும் நீட்டிப்பேன்
அவனாக கதவை உடைத்து
அவன் மரணித்ததைக் கூறா வரை.
பொதுவாக
'நான்' வரும் கவிதைகளை
அவன் விரும்புவதில்லை.
'அவன்' வருவதை நானும்..

**றாம் சங்கரி**



ஊசி இலைக்காடுகளின்
ஊடாக பதிந்து சென்ற
இரு ஜோடி
பாதத்தடங்கள்

ஓரிடத்தில்

ஒன்றான பின்
பாதையெங்கும்
கண்ணீர் துளிகள்
...
மலைப்பாதையில்
ஒற்றைப்பறவை
வழிகாட்டியபடி
பறக்கின்றது ..
..
பக்கத்தில் எங்கோ
மலையருவியின் சப்தம் ..!

**கருணாநிதி ஷண்முகம்**







நீள கிரீதா கண்ணாடி சகித ஜானி;
லெதர் ஜாக்கட் ரதியோடிருக்கும் கழுகு;
காய்த்து தொங்கும் கத்தரிகளென
எறி குண்டுடன் மனிதன்;
அபய முத்திரையுடன் ராகவேந்திரர்;
தொடை தட்டும் அண்ணாமலை;
வெண்தாடி அருணாச்சலம்;
எழு நூற்றெண்பத்தாறு
பட்டயை புஜத்தில் கட்டிய உழைப்பாளி;
அமிதாப்பின் மருமகளை
அணைத்தபடியான எந்திரன்;
என எவருமே
ஒரு பொருட்டேயல்ல பசி வந்துவிடில்;
கருப்பு வெள்ளை மசிகளை
உடம்பெங்கும் ஊற்றியது போலிருக்கும்
மார்க்கெட் தெரு மாட்டிற்கு ....

**கோ. ஸ்ரீதரன்**

## களவுபோகும் களஞ்சியத்தின் கதை

*எங்களூரில் கண்டுபிடிக்கப்பட்ட
எண்ணைக்கிணறு ஒன்று
நதிகள் தவழ்ந்த ஆற்று மணலில்
கரைபுரண்டு ஓடுகிறது..
வாளிகள் நிரம்பிப்போனது
குடங்கள் நிறைந்து வழிந்தது
வீடுகளை எண்ணைகளிடம்
ஒப்புக்கொடுத்து விட்டு தெருவில் கறைகளோடு
எதையோ தேடிக்கொண்டிருந்தோம்..!
கடனுக்கு வாங்கிய மோட்டார் பைக்குகளில்
குறையாமல் நிரப்பிய எண்ணையோடு
மிக நீண்ட தூரமானது எங்கள் பசியின் பயணங்கள்....!
ஏழு மலை தாண்டி ஏழு கடல்தாண்டி வந்து
அவ்வப்போது தந்து போகிறார்
கைபிடி அரிசியை நாங்கள்
செதுக்கிய கடவுள்....!*

**க. ராஜகுமாரன்**

*சிகிச்சைக்கு முன் எனும் விளம்பர புகைப்படத்தில்
சிரத்தில் முடிகளற்று இருப்பவள்,
சிகிச்சைக்குப் பின் எனும் புகைப்படத்திற்காக
செயற்கை முடிக்கற்றைகளை
பொருத்திக் கொண்டிருக்கிறாள்.
சிகிச்சைக்கு முன் பருத்திருந்த அவளது வயிறு
சிகிச்சைக்குப் பின் வறண்ட ஆறாய்..
வறள் ஆற்றில் தவழ்ந்த வண்ணம்
அவள் மார்பு நோக்கி வரும்
சிறு குழவியின் சின்னஞ் சிறு சிர மயிர்களை
வாஞ்சையோடு கோதுபவள்,
தன் மார்பு புற்றிலிருந்து வெண்சாகர நண்டுகளை
உவர் நிறத்தில் உலகிற்கு அப்பால்
வெளியேற்றிக் கொண்டிருக்கிறாள்.*

**ருத்ரன் ரிஷி**

வெத்தல செலவெல்லாம்
சிக்கனப்படுத்தி
சிறுவாடு சேத்துவச்சு
அண்டா குண்டாவோட
அல்லத்தோடும் அடகுவச்சு
முந்தி பொறந்த மவன்
முனகி கொடுத்த பணம்
முன்னூறும் போட்டுவச்சு
ஆயிரம் ரொக்கப்பணம்
அதிகாரி கையில
சலிக்காம ஒட்டவச்சேன்
மனு செஞ்சு நாளாச்சு
மாசம் ஆறாச்சு
அந்த எடத்த விட்டு
அதிகாரி போயாச்சு
அங்க இங்கன்னு
அலைஞ்சும் களச்சாச்சு
வந்து சேரவில்ல
வயசான கட்டைக்கு
ஒதவி பணமுன்னு
ஒருநூறு ரூவாத்தான்

**கே.செந்தில்குமார்**

ஒரு பொய்யை நம்பவைக்கவே
பல உண்மைகளைச் சொல்கிறார்கள்
கண்ணாடியில் காணும் பிம்பத்தை
உடன் அழைத்துச் செல்லுமாறு கட்டளையிடுகிறார்கள்
தாகமென்று ஏந்திய கரங்களில்
விழிகளை பிச்சையிடுகிறார்கள்
இந்த வாழ்வைக் கொண்டாட
இவர்களே வழிகாட்டியென
ஊரெல்லாம் கூறிவருமாறு கட்டளையிடுகிறார்கள்
இப்போதைக்கு கூண்டுப் பறவையோடு
சில வாழ்வை சொல்லுதல் அவசியமெனப் படுகிறது

**க.அம்சப்ரியா**

காலப்படிவுகள் படியப் படிய
எப்போதாவது வருவதுண்டு
உன் நினைவு
நகர நெரிசலில்
பயணத்தில் எதிர்ப்பட்டு
புன்னகைத்துச் செல்லும் நண்பன் மாதிரி.
ஓய்வாய் அமர்ந்து
பழைய நினைவுகளில் மூழ்கும் வரம்
வாழ்வில்
இதுவரை வாய்க்கவில்லை எனக்கு.
உனக்கு?


**ஜி.சிவக்குமார்**

உரலுக்குள் சிக்கிய
தலையை
உடைபடாமல் நகர்த்தும்
சாமர்த்தியத்தை
கற்றுத்தருகிறது வாழ்வு
நையப்புடைத்து
தூற்றிய பின்னும்
காற்றுவெளியில்
உலவுகிறது மிச்சப் புரளிகள்
மட்காத நெகிழியாய்
எரிந்த பின்னும்
உயிர்த்திருக்கிறது
மனக்குப்பைகள்
கூடுவிட்டுப் பிரியும்
பறவைகளைத் துரத்துகிறது
குஞ்சுகள் நினைவு
ஆலமரத்தின் விழுதுகள்
விரும்பித்தான் தாங்குகின்றன
முதாதயரை
ஓயாது ஒலிக்கும்
பறவைக்கூட்டத்துள்ளே
பிரியட்டும் பறவையின் உயிர்
எரிகின்ற சிதையின்
சுவடுகள் மீதே
எரியூட்டப்படும்
மிச்சப்பிணங்களும்.

**குமரேசன் கிருஷ்ணன்**

பிரிவதென முடிவு செய்த
நம் கடைசி சந்திப்பில்
ஒப்பந்தங்களின் சாட்சியாக
சில முத்தங்களை
பிச்சைபோல் யாசித்து நிற்கிறது
நம் கண்கள்...
வேடம் தரித்த இந்த
வாழ்விலிருப்பதைவிட
நாம்
ஆதி மனிதனாகவே
இருந்திருக்கலாம்....

**சந்துரு**



## நியந்தா யாரென்று

'காதலைப் போல சந்தோசம் வேறொன்றும் இல்லை'
என்று எழுதத் தொடங்கிய கதைக்குள்தான்
'நியந்தா' என்ற கதாபாத்திரமாக நுழைந்தாள்.....

எல்லாக் கதைக்குள்ளும் அவள் பெயர் வரும்
இடங்களில் மினுங்கித் திரியும்
பட்டாம் பூச்சிகளை சேர்த்துக் கொள்கிறாள்...

யூகங்களின் தீர்ப்பைப் பற்றி கவலைப் படாமல்
எனைக் கட்டிக் கொண்டே திரியும் திறவுகளை
கவிதையாக்க மொழி கொடுக்கிறாள்...

மடி சாய்ந்து இறந்து விடும் கதைகளில் முழுமூச்சாக
நடித்துக் கொடுக்கிறாள் நான்தான் பதறுகிறேன்...

'யாரின் சாயல் நான்' என்று அடிக்கடி கேட்பவளின்
உருவத்தை கதை கொண்டே வடிக்கிறேன், ஏனோ
அவளை அவளுக்கே காட்டாத
திகில் கதை பிடிக்கிறது.....


'நான்தானே நியந்தா?" என்று கேட்பவர் பற்றி
பின்னிரவில் புலம்பும் அவள்
நான், 'இல்லை' என்று சொல்லும் வரை
கதைக்குள் வராமல் அடம் பிடிக்கிறாள்......

எல்லாக் கதைகளையும் நியந்தா என்றே நிரப்பும் நான்
கடைசியாக, எழுதிய கதையில் வேறு பெயரை
எழுதியது ஒரு நகர்தல்....

அந்த வேறு பெயரிலும் நியந்தாதான் இருப்பதை
நான் தெரியாதவனாக நடிப்பது பொன்னிற புனைவு...

அதையும் பார்த்துக் கொண்டே
நியந்தாவும் தெரியாதவளாக இருப்பதுதான்
புதுக் கதையின் மூலக் கரு..
'காதலைப் போல துக்கம் வேறொன்றும் இல்லை'
என்று முடிவதாக இருக்கிறது அது...

**கவிஜி**



# வெறிச்சோடும் அமாவாசை..!

அமாவாசைக்குக் காக்கைக்கிட்ட படையல்
சீண்டப்படாமல் அப்படியே கிடந்தது
அடுக்கடுக்காய்ப் பெருகி நிற்கும் மொட்டைமாடிக்கு
இப்போதெல்லாம் வருவதில்லை
பறவைகளேதும்
நெடிய தூரத்தைக் கடந்துவிட்டன அவைகள்
கூவி அழைக்கும்படியாக
எவ்விடியலும் நிர்பந்திப்பதில்லை யாரையும்
அழைப்பவர்கள் இருக்கிறார்கள் இன்னமும்
அநேகப் பிரியங்களோடு
அலகுக்கு எட்டுவதில்லை உணவேதும்
எங்கோ பிறந்து
எங்கோ வாழ்ந்து
எங்கோ புதைந்துபோன தாத்தா
இங்கெப்படி வருவார் காக்கைவடிவில்?
இருந்தும் படையலிடுகிறேன் விதவித உணவுகளை.
அவருக்கு வாய்த்த
மக்காச் சோளத்திற்கும்,கேப்பைக் கூழுக்கும்
நானெங்கே போவேன் இந்நாளில்
தாத்தாவின் வருகையாய்க் காக்கைகள்
கரைய வேண்டும்
இந்த ஆடிக்குக் கொடுப்பினையில்லை
வாழ்வே வெறிச்சோடும்போது
தாத்தா சொல்வார்
இருள்வது அமாவாசையின் இயல்பென !

**காடன்**

உதிரும் இலையின் சிமிழ்களில்
ஒளி பருகிக்கிடக்கும் நிலா
உக்கிய இலை நரம்புகள் வழியே
உயிர்பருகிக் களிக்கிறது

மௌனத்தின் மயிர்த்துளைகள்
வேர்வரை செறிந்து
ஒருபிடி மணலில்
ஈரம் கேட்கிறது

பச்சையக்கோர்வைகளின் ஒளி செரித்த
சிலந்திவலையிடைவெளிகளும்
அதன்கள் ஓடும் வரிக்குதிரைகளும்
கனிந்த காலங்களும்
கரைந்த சக்கரை நாட்களையும்
இரைமீட்டிக்கொள்ளும் நிமிடங்களைப்
பகல் விழுங்கிக்கொண்டிருக்கிறது


செம்மண் சாற்றை விழுங்கி
செரித்திடும் செந்தட்டிப்பூவின்
பசியவனத்தில் பனித்துளிகள்
ஆங்காங்கே நீர் தெளிர்த்து
இன்னும் இருக்கிறாய் என
உயிர்ப்பித்துக்கொள்கிறது..!

**மின்ஹா**

## மழை கடிகாரம்

இம்முறை ஏதேனும் சற்று வித்தியாசமாக
பரிசளிக்க வேண்டுமென்ற
தீர்மானத்தோடு நுழைந்து
கடல் போல கொட்டி கிடக்கும்
சின்ன சின்ன சிலிர்ப்புகளில்
எதை தேர்வு செய்வதென்று அறியாமல்
குழம்பி தீர்த்து நீண்ட தேடலுக்கு பின்
வழக்கம் போல சுவர் கடிகாரம் ஒன்றை
திருமண பரிசாக நண்பனுக்கு வாங்கினேன்.
சிறிய அட்டை பெட்டிகுள் வைத்து
கலர் காகிதங்கள் போர்த்தி
முகப்பு சீட்டில் என்றும் நட்புடன்
எனது பெயரை எழுதி தந்தான்.
தன்னையே எதிர்பார்த்து
காத்திருக்கும் வேளையில்
வராத காதலி சற்று எதிர்பாராத கணத்தில்
கண் முன் தோன்றி
காதல் மழை பொழிவதை போல
அன்றைக்கென்று பார்த்து
திருமணத்திற்கு செல்ல விடாமல்
கொட்டி தீர்த்தது மழை.
பொங்களுக்கு வீட்டை சுத்தம் செய்யும்போது
நெடுநாட்களாய் கவர் பிரிக்கபடாமல்
அலமாரியில் கிடந்த
அந்த கடிகாரத்தை எடுத்து
வரவேற்பறையில் மாட்டியிருக்கிறாள் மனைவி.
இப்போது மணி பார்க்கும்போதெல்லாம்
ஓட்டை குடிசைக்குள் வைத்த
பாத்திரத்தில் சொட்டும்
மழைத்துளி போல
டிக்....டிக்... என்று
சொட்டி கொண்டே இருக்கிறது
அவன் ஞாபகம்.

**தரணி வேந்தன்**



என் தேகமறியா இசையை
உன் விரல் மீட்டெடுக்கிறது
சிந்திக்கிடப்பதாக உன் நாவைத்தட்டி
என் பருவங்களை உரசுகிறாய்
என்னை அணிந்து கொள்ளும்
உன் இரவுகள்
என் அங்கங்களில் உடுக்கை மீட்டுகிறது
என் அந்தரங்களில்
உன் தூரிகை வரையும்
வர்ணங்களின் வசியக் கலவையில்
என் நா வறண்டு
எச்சில் விழுங்கும் என்னை கிளறி
மறைத்திருக்கும் அழைப்பை
உன் பசித்த நாவால்
சூல் துலக்கி ஆகர்ஷண
வெப்பமூட்டும் உன் முத்தத்தின் இமைமூடலில்
மலையேறும் என் மனக்குரங்கு
பற்றிக்கொள்கிறது
எல்லை மீறும்
தரை விருப்பின் ஓர் பொழுதை

***(z) ஜபீர்***

நடுநிசியின்
கருப்புத் திரையை
வெளிச்சக் கீற்றுக்களால்
கிழித்தவாறே சீறிப்பாய்ந்த ரயில்
ஏதோ ஒரு நிலையத்தில்
மூச்சு வாங்க நின்றது..
உல்லாசப்பயணம்
முடிந்து திரும்பும்
பள்ளிச்சிறுவர் கூட்டத்தின்
இருக்கை எண்களைத்தேடும்
கிசுகிசுப்பு சத்தத்தில்
இள நீலப்பிணவறை
போல காட்சியளித்திருந்த
அந்த முன்பதிவுப் பெட்டியின்
இருண்ட ஆத்மா
தூக்கத்தில் சிரிக்கும்
மழலையாய்
புன்முறுவலித்து
புரண்டு படுத்தது..

**ஜி ராஜன்**

மின் இதழ்: பதிப்பு- 15

18-10-2017